**மின்னணு செய்தி மடல்**
**இதழ்: 11**
**மார்ச் & ஏப்ரல் 2021**


# புதிய தலைமுறை அறக்கட்டளை

**[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காகப் பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]**

**"ஊக்கமது கைவிடேல்"**

**தொழில் முனைவோராக உருவாகலாம்**
சுயதொழில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சிகள்
ISRB Expo(TM)
Indian Small & Rural Business Exposition

**கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் கல்வி முன்னேற்றம்**
புதிய தலைமுறை அறக்கட்டளை
விழுதுகள் உயர்கல்வித் திட்டம்

**கிராமப்புற மருத்துவ முகாம்கள்**
வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித் திட்டம்
**"வள்ளி"**
உங்களுடைய சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் குறித்த சமுதாய மருத்துவ செய்தி மடல்

**கிராமப்புற மாணவர்களின் முன்னேற்றம்**
இலவச கிராமப்புறக் கல்வி மையங்கள்

**பெண்கள் முன்னேற்றம்**
வள்ளியம்மை அம்மாள் தையற் பள்ளி

**சாலை பாதுகாப்பு நிகழ்ச்சிகள்**
கருத்தரங்கம் & விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

**அச்சத்தை அகத்தில் வைப்போம்**
**பொறுப்பை உணர்ந்தவராய் !**

முனைவர். பி. சத்தியநாராயணன்
நிறுவனர் & அறங்காவலர்
புதிய தலைமுறை அறக்கட்டளை

**எழுமின், விழுமின்; தொழில் முனைவு குறிக்கோளை அடையும் வரை நில்லாது உழைமின் !**

## தொழில் முனைவோர் கருத்தரங்கம் - கோவில்பட்டி



தூத்துக்குடி மாவட்டத்தின் MSME-ன் உதவி இயக்குநர் ஜெரினா பப்பி அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி மற்றும் சிறப்பு விருந்தினர்கள் மேடையில் வீற்றிருந்த காட்சி

"தடைகள் வெற்றியின் புதையல்; தடங்கல் வெற்றியின் தடங்கள்" இவ்வரிகளை மெய்ப்பித்து தடைகளையும், தடங்கலையும் சாதனைகளாக மாற்றக் கூடிய வல்லமை பெற்றவர்கள் இளைஞர்கள். இந்தியாவின் மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கும் மேல் இளைஞர்கள் தான். இளைஞர்களைத் தொழில் முனைவோர்களாக உருவாக்கும் விதமாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் உள்ள பைரவா மஹாலில் பிப்ரவரி 7, 2021 புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ (இந்திய சிறு மற்றும் கிராமப்புறக் தொழில்களுக்கான மையம்) சார்பில் இலக்கிய உரை மற்றும் அபிராமி சர்வீசஸ் ஆகியோருடன் இணைந்து இளைஞர்களை ஊக்குவிக்கும் விதமாகவும் தொழில் முனைவோர் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் முதல் நிகழ்வாக புதிய தலைமுறை அறக்கட்டளையின் தூத்துக்குடி மாவட்டத்தின் மண்டல மேலாளர் கணேசன் அனைவரையும் வரவேற்று ஐ.எஸ்.ஆர்.பி எக்ஸ்போவின் செயல்பாடுகள், நிகழ்ச்சிகள், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் மற்றும் சிறப்பு விருந்தினர்களை அறிமுகமும் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் கண்ணன், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கிளை மேலாளர் முருகன், MSME-ன் உதவி இயக்குநர் ஜெரினா பப்பி, SBI மாவட்ட முதன்மை வங்கியின் முதன்மை மேலாளர் யோகானந்த் ஈஸ்வர் ஆகியோர் "மத்திய மற்றும் மாநில அரசுகளின் மேன்மையான கடன் திட்டங்கள் (புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் NEEDS Scheme வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் பல்வேறு திட்டங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் வழிமுறைகள் குறித்தும் பயனுள்ள தகவல்களை விரிவாக எடுத்துரைத்தனர்.

ஆசியா பார்ம்ஸ் நிர்வாக இயக்குநர் பாபு தனது தொழில் அனுபவங்களை பற்றி கூறும்பொழுது டிசம்பர் 6, 2000 ஆம் ஆண்டு கோவில்பட்டியில் குறைந்த அளவு வாடிக்கையாளர்களை கொண்டு தனது நிறுவனத்தை துவங்கி தொழில் மீது கொண்ட நம்பிக்கை, விடாமுயற்சி தொலைநோக்கு பார்வை ஆகியவற்றின் மூலம் இன்று 2000க்கும் அதிகமான வாடிக்கையாளர்களுடன் கனினி பிரிண்ட் அவுட் பேப்பர்ஸ் தொழிலில் வெற்றி பெற்ற அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். அபிராமி சர்வீசஸ் நிர்வாக இயக்குநர் முருகன் தனது தொழில் அனுபவங்களை பற்றி குறிப்பிடும்போது தொழில் முனைவோர்கள் எப்போதும் வாய்ப்புகளை கண்டறிந்து அதனை சரியான முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும் என்று தனது ஆலோசனைகளை வழங்கினார். கூரியர் தொழில், உணவுப்பொருட்கள் தயாரித்தல், தொழில் & வேலை வாய்ப்பு பயிற்சி மற்றும் தீ தடுப்பு சாதனங்கள் உற்பத்தி போன்ற பல்வேறு தொழில் செய்துவரும் 50க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

தொழில் அதிபர்கள் அபிராமி சர்வீசஸ் முருகன், ஆசியா பார்ம்ஸ் பாபு ஆகியோர் தங்களது தொழில் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் 50க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

## சுருள்பாசி வளர்ப்பு & பாக்கு மட்டை தட்டுகள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் - கருத்தரங்கம்


சிறப்பு விருந்தினர்கள் மேடையில் வீற்றிருந்த காட்சி


கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஒரத்தூர் கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளியில் உன்னத் பாரத் அபியான், எஸ்.ஆர்.எம். தொழில் நுட்பக் கழகம் மற்றும் புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ (இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்) இணைந்து பிப்ரவரி 27, 2021 அன்று மாலை 4.00 மணியளவில் கிராமத்துப் பெண்களை ஊக்குவிக்கும் விதமாகவும் தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையிலும் சுருள்பாசி வளர்ப்பு மற்றும் பாக்கு மட்டை தட்டுகள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. அறக்கட்டளையின் சார்பில், கே.விஜயகோபால், தலைமை திட்டங்கள் அதிகாரி, ச.சுரேஷ்கண்ணன், முதுநிலைத் திட்ட மேலாளர் மற்றும் ஈ.மணிராஜ், விழுதுகள் திட்ட மாணவர்களின் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கின் தொடக்கமாக முனைவர் வ. திருமுருகன், இணை இயக்குநர், நோடல் அதிகாரி - உன்னத் பாரத் அபியான் & எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், அவர்கள் நிகழ்ச்சியின் நோக்கம் குறித்து சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து ந.பாவேந்தன், உரிமையாளர், எவர்கிரீன் ஏஜென்சீஸ், சென்னை அவர்கள் பாக்கு மட்டை தட்டு உற்பத்தி முறைகள், மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்கள் அவற்றைச் சந்தைப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து பேசிய இரத்தினராஜ சிங்கம், சுருள்பாசி வளர்ப்பு பயிற்சியாளர், சென்னை அவர்கள் சுருள்பாசி வளர்ப்பு முறைகள், பயன்பாடுகள், சந்தைப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். இக்கருத்தரங்கில் செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செட்டிப்புண்ணியம், நாட்டரசன்பட்டு, கொளத்தூர், தென் மேல்பாக்கம், அஞ்சு உள்ளிட்ட எட்டு கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உட்பட 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

"ஊக்கமது கைவிடேல்"

# புதிய தலைமுறை அறக்கட்டளை

[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காகப் பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]

**இளைஞர்களுக்கு வாய்ப்புகள் ஏராளம்...**
**உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள்...**
**பிறரோடு ஒப்பீடு வேண்டாம்...**



சிறப்பு விருந்தினருடன் அறக்கட்டளையின் அலுவலக ஊழியர்கள்

இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டங்கள் உருவாக்கப்பட்டு அவை 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் அமல்படுத்தப்பட்டன. அந்த சிறப்பு மிகுந்த நாளை கௌரவிக்க அன்று நாம் இந்திய குடியரசு தினவிழாவைக் கொண்டாடுகிறோம்.

72வது இந்திய குடியரசு தினம் புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் ஜனவரி 26, 2021 அன்று அறக்கட்டளையின் சென்னை, தி.நகர் அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. முதல் நிகழ்வாக கே.எஸ்.கமாலுதீன், நிர்வாக இயக்குநர், Blue Bharath Exim Pvt. Ltd. சென்னை அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து பேசுகையில், "உங்களுக்குத் தெரிந்த தகவல்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள், உங்களை மற்றவர்களோடு ஒப்பிடாதீர்கள், மற்ற மொழிகளைக் கற்றுக் கொள்ள முயற்சி செய்யுங்கள், எந்த மொழியில் படிக்கிறோம் என்பது முக்கியமல்ல, உங்களை எப்படி வளர்த்துக் கொள்கிறோம் என்பதே முக்கியம்" என்று பல்வேறு சுவராசியமான தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து அறக்கட்டளையின் செயலாளர் து.வே.வெங்கடகிரி பேசுகையில், இந்திய சுதந்திரப் போராட்டம், அரசியல் சட்டம் உருவான விதம் ஆகியவற்றை குறித்துச் சுருக்கமாக விவரித்து குடியரசு தினத்தின் சிறப்புகளை எடுத்துரைத்தார்.

அறக்கட்டளையின் கீழ் இயங்கும் 22 கிராமப்புறக் கல்வி மையங்களிலும் குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. மையத்தின் ஆசிரியர் / ஆசிரியைகள் மற்றும் ஊர்த் தலைவர்கள் குடியரசு தினத்தின் சிறப்புகள் மற்றும் தேசபக்தியின் அவசியத்தை வலியுறுத்தினர்.

## "வங்கம் தந்த சிங்கம்", தேசிய தலைவர் — நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் —



பாரத தேசத்தின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்து கொண்ட ஆயிரக்கணக்கான தியாகிகளில் மக்கள் மனதில் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் ஒருவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஆவார். இந்தியாவில் ஒரிசா (இன்றைய ஒடிசா) மாநிலத்தில் கட்டாக் எனும் இடத்தில், 1897ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாள், வங்காள, இந்துக் குடும்பத்தில், பிறந்தார். ஐந்து வயதான போது, கட்டாக்கிலுள்ள பாப்டிஸ்ட் மிசன் ஆரம்பப் பள்ளியில் இணைந்த சுபாஷ், ஏழு ஆண்டுகள் அங்கு கல்வி பயின்றார். பின்னர், தன் உயர் கல்வியை கொல்கத்தா ரேவன்ஷா கல்லூரியில் தொடங்கியவர் 1913 தேர்வில் கல்கத்தா பல்கலைக்கழக எல்லைக்குள் 2வது மாணவராகத் தேறினார்.

இக்காலக்கட்டத்தில் இந்திய விடுதலை இயக்கம் காங்கிரஸ் அமைப்பின் கீழ் மகாத்மா காந்தியின் தலைமையில் புதிய உத்வேகத்துடன் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிறந்த தேச பக்தரான போஸ் காங்கிரஸில் தன்னை இணைத்துக்கொண்டு கடுமையாக உழைத்தார். இவரது மதி நுட்பமும் பேச்சுத்திறமையும் அனைவரையும் கவர்ந்தன. விரைவில் காங்கிரஸின் முன்னணி தலைவர்களுள் ஒருவரானார். காங்கிரஸ் மகா சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் காங்கிரஸிலிருந்து விலகி புரட்சி பாதையைத் தேர்ந்தெடுத்தார். அதன் விளைவாக இந்தியாவில் இருந்து வெளியேறி ஐரோப்பா சென்றார். இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் உள்ள தலைவர்களின் ஆதரவை திரட்டினார். ஜப்பான், தாய்லாந்து, மியான்மர், மலேசியா ஆகிய நாடுகளில் வாழும் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் INAஇல் இணைந்தனர்.

போஸ் அவர்களின் வீரமிக்க சொற்பொழிவுகள் அவர்களுக்குப் பெரும் உத்வேகமாக அமைந்தது. இரண்டாம் உலகப் போர் உச்சத்தில் இருந்த காலக்கட்டத்தில் INA ராணுவத்தினர் முன்னேறி அந்தமான் தீவைக் கைப்பற்றினர். அங்கு போஸ் இந்திய சுதந்திர கொடியை ஏற்றினார். இவரது வாழ்க்கை வரலாறு இளைஞர்களுக்குத் தேச பக்தியை ஊட்டுவதாக இன்றும் அமைகின்றது.

## கிராமப்புற இளைஞர்களுக்கு பாக்கு மட்டை தட்டு உற்பத்தி - சுயதொழில் கருத்தரங்கம்

இளைஞர்கள் சுயதொழில் செய்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் வேலூர் மாவட்டம் கவசம்பட்டு கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளில் புதிய தலைமுறை அறக்கட்டளை சார்பில் ஜனவரி 30, 2021 அன்று பாக்கு மட்டை தட்டு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் சென்னை வளசரவாக்கத்தில் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பாக்கு மட்டை தட்டு உற்பத்தி தொழில் செய்து வரும் எவர்கிரீன் ஏஜென்சீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ந.பாவேந்தன் பாக்கு மட்டை தட்டு உற்பத்தி, சந்தைப்படுத்தும் வழிமுறைகள், தொழில் தொடங்க அரசின் மானியம் பெறும் வழிமுறைகள், மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்கள், பாக்கு மட்டை தட்டு இயந்திரம் குறித்தும் பல்வேறு பயனுள்ள தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.

இக்கருத்தரங்கில் 20க்கும் மேற்பட்ட கிராமப்புற இளைஞர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். கவசம்பட்டு கிராமத்தில் இயங்கி வரும் கிராமப்புறக் கல்வி மையத்தின் ஆசிரியர் ஜே. வேல்முருகன் அவர்களின் உதவியுடன் இக்கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது. பாக்கு மட்டை தட்டு பயிற்சிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்- **8754417322**



பயிற்சியாளர் பாவேந்தன் சிறப்புரையாற்றிய காட்சி


கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்

“ஊக்கமது கைவிடேல்”

# புதிய தலைமுறை அறக்கட்டளை

[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காகப் பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]

## புதிய தலைமுறை அறக்கட்டளையின் தேசிய அறிவியல் தின விழா - தமிழகத்தின் தலைநகர் மற்றும் 22 மாவட்டங்களின் கிராமப்புறக் கல்வி மையங்களில்... மாணவர்களுக்கு அறிவியல் சிந்தனையை ஊக்குவித்தல்




எஸ். பாலகுருநாதன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் (National High School, Neyveli) அவர்கள் அறிவியல் செயல்முறை விளக்கம் கொடுத்த காட்சி



எஸ். பாலகுருநாதன் அவர்களுக்கு பள்ளி சார்பில் பொன்னாடை போர்த்திய காட்சி

தேசத்தலைவர்கள் மற்றும் தியாகிகளைக் கொண்டாடுவது போல அறிவியல் மேதைகளும் போற்றப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் 1987ஆம் ஆண்டு இந்திய தேசிய அறிவியல் நாள் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தத் தினம் கொண்டாடப்படும் வரலாறு ஏனைய தினங்களைப் போல அல்லாமல் வழக்கத்துக்கு மாறானது ஆகும். பொதுவாக தேசத்தலைவர்களின் பிறந்த மற்றும் நினைவு நாட்களே சிறப்பு நாட்களாக அறிவிக்கப்படும். இந்த இரண்டு வகையிலும் அல்லாமல் இந்திய மண்ணில் பிறந்து உலகம் போற்றும் வகையில் பல அரிய கண்டுபிடிப்புகளை ஆராய்ந்து வெளியிட்ட சிறந்த இயற்பியல் மேதையுமான சர். சி.வி. இராமன் தன்னுடைய ஆராய்ச்சி முடிவை வெளியிட்ட பிப்ரவரி 28ம் தேதி தேசிய அறிவியல் தினம் என அறிவிக்கப்பட்டது. சர். சி.வி. இராமன், தனது புகழ்பெற்ற ராமன் விளைவை (Raman Effect) இந்நாளிலேயே கண்டுபிடித்தார். இந்தக் கண்டுபிடிப்பு உலகளாவிய பெருமையை இந்தியாவிற்குப் பெற்றுத் தந்ததுடன் உயரிய விருதான நோபல் பரிசும் (1930) இவருக்குக் கிடைத்தது.

புதிய தலைமுறை அறக்கட்டளை ஒவ்வொரு ஆண்டும் தேசிய விழாக்களை தவறாமல் தமிழகத்தின் தலைநகர் மற்றும் 22 கிராமப்புறக் கல்வி மையங்களில் கொண்டாடி வருகிறது. அதே போல் இந்த ஆண்டும் தேசிய அறிவியல் தினம் பிப்ரவரி 28-ஐ கொண்டாடும் நோக்கில், சர். சி.வி. இராமன் கண்டுபிடித்த “இராமன் கோட்பாடு”-ஐ மாணவ-மாணவிகளுக்குக் கொண்டு சேர்க்கும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டு, 22 கிராமப்புற கல்வி மையங்களுக்கு தகவல் அனுப்பப்பட்டது.

25.02.2021 அன்று சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள “அன்னை வேளாங்கண்ணி மெட்ரிகுலேஷன் பள்ளியில்” எஸ். பாலகுருநாதன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் (National High School, Neyveli) மற்றும் NCERT & Times of India Awardee) அவர்கள் அறிவியல் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. பள்ளியின் முதல்வர் டாக்டர். டெல்பின் தேவராஜ் அவர்கள் தலைமை ஏற்று சிறப்புரை ஆற்றினார். சுமார் 100 மாணவ-மாணவிகளுக்கு ஒளிச்சிதறல் பரிசோதனை, காற்றினை எவ்வாறு பெரிய கன அளவுகளில் பிடிக்கலாம், கோள்கள் சூரியனை எவ்வாறு சுற்றி வருகிறது என்பது போன்ற Science Experiment (அறிவியில் கோட்பாடு செய்முறை) காண்பிக்கப்பட்டது.

**விழாவில் அறிவியல் பரிசோதனையின் சிறப்புகள்:** மாணவ-மாணவிகள் ஆர்வமுடன் கண்டுகளித்து, தங்களது சந்தேகங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டனர். முன்னதாக புதிய தலைமுறை அறக்கட்டளையின் திட்ட முன்னணி அலுவலர் கே.எம். சாதிக் பாஷா துவக்க உரை ஆற்றினார். மூத்த திட்ட அலுவலர் எஸ். இளமாறன் முன்னிலை வகித்தார்.

இதன் தொடர்ச்சியாக புதிய தலைமுறை அறக்கட்டளையின் வளசரவாக்கத்தில் உள்ள மாலை நேரக் கல்வி மையத்தில் மாலை 5.00 மணியளவில் நடைபெற்றது. கல்லூரிப் பேராசிரியை திருமதி. சுமித்ரா தேவி அவர்கள் தலைமையேற்றுச் சிறப்புரை ஆற்றினார். முன்னதாகப் புதிய தலைமுறை அறக்கட்டளையின் திட்ட முன்னணி அலுவலர் கே.எம். சாதிக் பாஷா துவக்க உரை ஆற்றினார். சுமார் 30 மாணவ-மாணவிகளுக்கு பல ஆர்வமும், ஆச்சரியமும் கலந்த அறிவியல் பரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. மாணவ-மாணவிகளும், குழந்தைகளும் புதிய செய்திகளைத் தெரிந்து கொண்ட மகிழ்ச்சியில் திளைத்தனர்.







புதிய தலைமுறை அறக்கட்டளை


[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காகப் பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]


## "விழுதுகள்" முதலாம் ஆண்டு மாணவர்கள் ஊக்குவிப்பு ஆன்லைன் கருத்தரங்கம்

பிப்ரவரி 16, 2021 அன்று மாலை 5.00 மணியளவில் நடந்த "**விழுதுகள்**" முதலாம் ஆண்டு மாணவர்கள் ஊக்குவிப்பு நிகழ்ச்சியின் தொடக்கமாக அறக்கட்டளையின் செயலாளர் து.வே.வெங்கடகிரி அவர்கள் பேசுகையில், முதலாமாண்டு மாணவர்களாகிய நீங்கள் முதலில் உங்கள் படிப்பில் கவனம் செலுத்தி தங்கள் கல்வி நிறுவனத்திற்கும், சமுதாயத்திற்கும் பெருமை தேடித் தர வேண்டும் என்றும் உங்கள் தனித்திறமைகளை வளர்த்துக்கொண்டு சமூக சேவையில் உங்களை ஈடுபடுத்தி கொள்ள வேண்டும் என்றும் உங்கள் வாழ்வில் லட்சியத்தை அடைய கடினமாக உழைக்க வேண்டும் என்றும் கூறினார்.

பின்னர் அதிகாலை சீக்கிரமாக எழுவதால் கிடைக்கும் பயன்கள் மற்றும் அதிகாலையில் எழுந்து படிப்பதால் நினைவாற்றல் பெருகும் என்பதை உணர்த்தும் வகையில் ஒரு சிறிய காணொளி காட்சி ஒளிபரப்பட்டது. அதனைத்தொடர்ந்து மாணவர்கள் அனைவரும் அவர்களைப் பற்றி சுய அறிமுகம் (பெயர், சொந்த ஊர், குடும்பப் பின்னனி மற்றும் அவர்களின் எதிர்கால லட்சியம்) குறித்தும் சுருக்கமாக கூறினர்.

இறுதியாக விழுதுகள் திட்ட மாணவர்களின் ஒருங்கிணைப்பாளர் மணிராஜ் நன்றியுரை வழங்கினார். 54 மாணவ-மாணவிகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.




## 44வது புத்தகக் கண்காட்சியில் புதிய தலைமுறை பங்கேற்பு

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கம் (BAPASI - Booksellers' and Publishers' Association of South India) சார்பில் ஆண்டு தோறும் மிகப்பெரிய புத்தகத் திருவிழா (Book Festival) நடைபெறும். அந்த வகையில் இந்த ஆண்டு பிப்ரவரி 24 முதல் மார்ச் 9, 2021 வரை 44ஆம் ஆண்டு புத்தகக் கண்காட்சி சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெற்றது.



மொத்தம் 534 அரங்குகள் கலந்து கொண்ட இக்கண்காட்சியில் புதிய தலைமுறை குழுமம் கலந்து கொண்டது. இந்த கண்காட்சியில் கலந்து கொண்ட பொது மக்கள் புத்தகங்களைப் பார்வையிடுவது மட்டுமின்றி வாங்குவதிலும் ஆர்வம் காட்டினர். முக்கியமாகத் தமிழர் பண்பாடு, பழந்தமிழ் இலக்கியத் திறனாய்வுகள், கணினித் துறையில் சமீபத்திய வளர்ச்சி, வரலாற்று நிகழ்வுகள், ஆரோக்கியம், ஆன்மிகம், சுற்றுலா, குழந்தைகளுக்கான புத்தகங்கள் ஆகியவற்றில் அதிகம் ஆர்வம் காட்டினர். ஆங்கில மழலைப் பாடல்களுக்கு இணையாகத் தமிழ் மழலை பாடல்கள் கொண்ட புத்தகங்கள் அதிகம் விற்பனை ஆகியது. 15 லட்சம் தலைப்புகளில் தமிழ் & ஆங்கில மொழிகளில் இலக்கியம், கலை, அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு, பொது அறிவு, விளையாட்டு, உணவு, உடல் நலம் உள்ளிட்ட பல பிரிவுகளில் புத்தகங்கள் இப்புத்தகக் காட்சியில் அடக்கம்.




நெய்வேலியில் உள்ள National High School பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் பாலகுருநாதன் அவர்கள் பிப்ரவரி 25, 2021 அன்று மாலை நமது புதிய தலைமுறை அரங்குக்கு வருகைத் தந்து புத்தகங்களை வாங்கிச் சென்றார்.



Our Sponsors

SRM Technologies · Green Pearl Education · SRM Engineering Construction Corporation Ltd. · City Union Bank Ltd · NABARD National Bank for Agriculture and Rural Development · TMB Tamilnad Mercantile Bank Ltd — Be a step ahead in life